**வெலிகந்த பிரதேச சபை**

**பொலன்னறுவை மாவட்டம்**

----------------------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

------------------------------

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

----------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 ஏப்ரல் 08 திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 ஜூன் 03 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஜூலை 30 திகதி சபையின் செயலாளரிற்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 அபிப்பிராயம்

--------------------

நிதிக் கூற்றுக்களானவை வெலிகந்த பிரதேச சபையின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதிய முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

----------------------------------------------------------------

1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

------------------------------------------

பின்வரும் கணக்கீட்டு குறைபாடுகள் அவதானிக்கப்பட்டது.

(i) மீளாய்வாண்டின் போது சபை அலுவலர் ஒருவருக்கு செலுத்தப்படவேண்டிய நிலுவை சம்பளம் ரூபா 25,000 தொகையினை கடன் கொடுத்தோரின் கீழ் காட்டப்படவில்லை.

(ii) காசுப் பாய்ச்சல் கூற்றில் முதலீட்டு செயற்பாடுகளின் கீழ் காட்டப்பட வேண்டிய நிதி பெற்றுக் கொள்ளல் மற்றும் அகற்றல் பெறுமதி ரூபா 211,412,682 தொகை எனினும், அப் பெறுமதி ரூபா 15,080,011 தொகை என பிழையான முறையிலும், வழமையான செயற்பாடுகளின் மூலம் ஏற்பட்டுள்ள பற்றாக்குறை ரூபா 4,084,286 தொகை எனினும், அதனை ரூபா 1,933,043 தொகை எனவும் பிழையான முறையில் காட்டப்பட்டுள்ளமையால் சமர்பித்திருந்த காசுப் பாய்ச்சல் கூற்றின் மூலம் பிழையற்ற தகவல்கள் சமர்பித்திருக்கவில்லை.

1.3.2 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

------------------------------------------------------------

தேவையான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்பிக்கப்படாமையால் கூட்டுத்தொகை ரூபா 238,230,118 இற்கான கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமான சான்றுறுதி செய்வதற்கு முடியாதிருந்தது.

2 நிதி மீளாய்வு

---------------------

2.1 நிதி விளைவுகள்

---------------------------

சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2014 திசெம்பர் 31 திகதிய உள்ள சபையின் வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவு ரூபா 4,084,286 ஆக காணப்பட்டதுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டில் வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவுகள் ரூபா 145,832 ஆக காணப்பட்டமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது நிதி விளைவுகளில் ரூபா 3,938,454 இற்கான வீழ்ச்சி ஒன்று அவதானிக்கப்பட்டது.

2.2 வருமான நிருவாகம்

-------------------------------

2.2.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

---------------------------------------------------------------------------------------------------------

தலைவரினால் மீளாய்வாண்டிற்காக சமர்பிக்கப்பட்டிருந்த மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் பற்றிய தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | வருமான விடயம் | மதிப்பீட்டு வருமானம் | உள்ளவாறான வருமானம் | திசெம்பர் 31 திகதிய உள்ளவாறு திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 |
| (i) | வீதவரி | 750 | 320 | - |
| (ii) | வாடகை | 6,125 | 2,124 | 852 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 1,122 | 222 | 477 |
| (iv) | ஏனைய வருமானங்கள் | 16,062 | 10,325 | 3,360 |

3 செயற்பாட்டு மீளாய்வு

-----------------------------------

3.1 பயன்படுத்தப்படாத மற்றும் குறை பயன்பாட்டு சொத்துக்கள்

-----------------------------------------------------------------------------------------------

(அ) சபைக்கு சொந்தமாக காணப்பட்ட ரூபா 613,500 பெறுமதியான அரிசி மா மற்றும் அரிசி மா உடன் தொடர்புடைய உற்பத்திப் பொருட்களை மேற்கொள்ளும் உபகரணத் தொகுதி 05 வருடங்களுக்கு மிகையான காலம் முதல் எதுவித தேவைக்கும் பயன்படுத்தப்படாமல் செயற்படாது காணப்பட்டது.

(ஆ) சபைக்குச் சொந்தமான 02 நான்கு சில்லு டிரக்டர் வண்டிகள் மற்றும் இரண்டு சில்லு கை டிரக்டர் ஒன்று 03 வருடங்களுக்கு மிகையான காலம் முதல் பயன்படுத்தப்படாமல் சபை வளவில் தடுத்து வைக்கப்பட்டிருந்தது.

3.2 செயற்பாட்டு மற்றும் முகாமைத்துவ திறமையின்மை

---

(அ) சபையினால் மீளாய்வாண்டின் போது கொடுப்பனவு செய்வதற்காக எழுதப்பட்டிருந்த ரூபா 6,048,500 இற்கான 47 காசோலைகள் இரத்து செய்யப்பட்டிருந்தது என அவதானிக்கப்பட்டது. அத்துடன் அதற்காக தெளிவான காரணம் ஒன்று வெளிப்படுத்தப்படவில்லை. அக் காசோலைகளில் ரூபா 5,398,030 தொகை பெறுமதியான 10 காசோலைகள் மீளாய்வாண்டிற்கான செயற்திட்டங்களுக்காக செலுத்த வேண்டிய காசோலைகளாகும்.

(ஆ) ஏனைய வருமான நிலுவையின் கீழ் காட்டப்பட்டிருந்த ரூபா 436,695 இற்கான 7 நிலுவை மீதிகளை அறவீடு செய்வதற்கு போதியளவான நடவடிக்கைகள் சபையினால் கடைபிடித்திருக்கவில்லை.

3.3 பசு மாடுகள் கொள்வனவு

---

(அ) 2013 பாதீட்டு பிரேரணையின் பிரகாரம் மாகாணங்களின் வறுமை நிலையைக் குறைக்கும் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் வட மத்திய உள்ளூராட்சி திணைக்களத்தினால் விதவைப் பெண்களுக்கு பசு மாடுகள் வழங்கும் நிகழ்ச்சித் திட்டத்திற்காக ரூபா 2,000,000 இற்கான ஏற்பாடு ஒன்று சபைக்கு வழங்கப்பட்டிருந்தது. குறிப்பிட்ட நிகழ்ச்சித் திட்டத்திற்காக பசு மாடுகள் வழங்குவதற்காக பொலன்னறுவை மாவட்டத்தில் அரசாங்க கால்நடை பண்ணையின் மூலம் வினவாமல், தனியார் வழங்குனர்களின் கூறுவிலைகளின் மீது 33 பசு மாடுகள் ரூபா 1,980,000 தொகைக்கு கொள்வனவு செய்து 33 விதவைப் பெண்களுக்கு விநியோகிக்கப்பட்டிருந்தது. 33 விதவைப் பெண்கள் தெரிவு செய்தல் தொடர்பாக எழுத்து மூல சான்று ஏதும் காணப்படவில்லை. குறிப்பிட்ட நலன்பெறுனர் பசு மாடுகள் பெற்றதற்கான கையொப்ப பத்திரத்தின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை மற்றும் நிகழ்ச்சித் திட்டம் வெற்றிகரமாக செயற்படுகிறதா என தொடர்செயல் நடவடிக்கை சபையினால் செயறபடுத்தப்படாமையும் அவதானிக்கப்பட்டது.

(ஆ) கொள்வனவு வழிகாட்டல் கோவையின் பிரிவு 2.4 இன் ஏற்பாடுகளின் கீழ் சபைக்காக கொள்வனவுக் குழு ஒன்று நியமனம் செய்யப்பட வேண்டும், எனினும் வெலிகந்த பிரதேச சபையினால் மீளாய்வாண்டிற்காக கொள்வனவு குழு ஒன்று நியமனம் செய்து அதன் அங்கத்தவர்களை தெரிவு செய்திருக்கவில்லை.

3.4 பாதீட்டு கட்டுபாடு

---

பிரதேச சபைக்கு சொந்தமான வருமான மூலங்களை முறைப்படி எதிர்வு கூறல் மேற்கொள்ளாமல் மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்தமையால் மீளாய்வாண்டிற்கான உள்ளவாறான வருமானம் மற்றும் மதிப்பீட்டு வருமானங்களிடையே நூற்றிற்கு 25 முதல் நூற்றிற்கு 81 வரை முரண் ஒன்று அவதானிக்கப்பட்டது.

3.5 திண்ம கழிவுப் பொருள் முகாமைத்துவம்

----------------------------------------------------------------

மீளாய்வாண்டின் போது வெலிகந்த பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தில் குப்பை முகாமைத்துவ நிகழ்ச்சித் திட்டமொன்று செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. அத்துடன் பிரதேசத்தில் சேகரிப்படும் குப்பைகளை முறைசாரா விதமாக காட்டுப் பகுதியில் குவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

3.6 ஆகக் கணக்காய்வு

-------------------------------

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளின் போது சபையில் அகக் கணக்காய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அத்துடன் உள்ளூராட்சித் திணைக்களத்தின் மூலமும் போதியளவு கணக்காய்வு ஒன்று பிரதேச சபையில் மேற் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

4 முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

--------------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு பகுதிகள் தொடர்பாக விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) பாதீட்டுக் கட்டுப்பாடு

(ஆ) வருமான நிருவாகம்

(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்